### சமூக நீதிக் கொள்கையை மனதில் ஏற்றுக்கொண்ட

# தி.மு.கழகம் ஆட்சியில் இருந்தால்தான் தமிழ்நாட்டிற்கு நல்லது!

## சென்னை கிழக்கு மாவட்டத்தில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னெடுப்பில் நடைபெற்ற

## ‘முன்னேற்றப் பாதையில் முப்பெரும் விழா’ கருத்தரங்கில் நடிகர் சத்யராஜ் உரை!

சென்னை, செப். 22 -

**சமூக நீதிக் கொள்கையை மனதில் ஏற்றுக்கொண்ட தி.மு.கழகம் ஆட்சியில் இருந்தால்தான் தமிழ்நாட்டிற்கு நல்லது என்று சென்னை கிழக்கு மாவட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னெடுப்பில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாக் கருத்தரங்கில் உரையாற்றுகையில் நடிகர் சத்யராஜ் குறிப்பிட்டார்.**

**அக்கருத்தரங்கில் நடிகர் சத்தியராஜ் ஆற்றிய உரை வருமாறு:-**

முதல் முறை நான் திராவிட முன்னேற்றக் கழக மேடைக்கு வந்தது - ஒரு அரசியல் கட்சி மேடைக்கு வந்தது, என்னுடைய அன்புத் தம்பி சேகர்பாபு மூலமாகத்தான். பெரியார் திடலில், கலைஞருடைய பிறந்தநாள் விழா. கலைஞர் சீரியஸாக காவேரி மருத்துவமனையில் படுத்துக்கொண்டு இருக்கிறார். அப்போது தி.மு.க. எதிர்க்கட்சியாக இருக்கிறது. சேகர்பாபு அவர்கள் அந்த மாவட்டச் செயலாளராக இருக்கிறார். அப்போது என்னை அழைத்தார். பெரியார் திடலில் நான் கலைஞரைப் பற்றிப் பேசி, என்ன… அவருடைய டயலாக் - இல் இரண்டு படம் நடித்திருக்கிறேன். எனவே, எடுத்த உடனே அவருடைய வசனத்தைப் பேசி, அவருடைய வசனத்தைப் பேசினால் எப்படி இருந்தாலும் கைதட்டி விடுவார்கள் அல்லவா… மேலே ஏறிய உடனேயே… “டேய் பூசாரி… நான் சாவுக்குத் துணிந்து விட்டேன். எனக்கு தெரியும்… நான் செய்யப் போகும் காரியத்திற்கு எது வெகுமதி என்று. தூக்கு மேடை… தூக்கு மேடை. பரவாயில்லை… உளுத்துப்போன சமுதாயத்தில் உன் போன்ற பூசாரிகள்- புண்ணியவான்கள் வேடம் போடும் நாடகத்தை விட்டுக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்திற்கு என் செய்கை ஒரு பாடமாக இருக்கட்டும்.” பராசக்தி படத்தில் நடிகர் திலகம் சிவாஜி அவர்கள் பேசிய வசனம். இந்த வசனத்தை எல்லாம் பேசி பெரிய அளவில் கைதட்டல்வாங்கிவிட்டேன்.

### அன்று தயக்கத்தோடு வந்தவன் இன்று துணிச்சலோடு வருகிறேன்!

எனக்கு, தம்பி சேகர்பாபு மேல் இருக்கும் பெரிய மகிழ்ச்சி என்ன என்றால், அறநிலையத் துறைக்குள் அதர்மம் உள்ளே வராமல், அறத்தோடு பாதுகாத்து நடத்திக் கொண்டிருப்பவர் சேகர்பாபு அவர்கள்தான். பலபேர் சூழ்ச்சி செய்கிறார்கள். அறநிலையத் துறை அரசாங்கத்திடம் இருக்கக் கூடாது; மதத்துக்குள் அரசியல் வரக்கூடாது என்று. இல்லை… இல்லை… இப்படிப்பட்ட ஒரு பாதுகாப்பு நிச்சயமாக அறநிலையத்துறைக்கு அவசியம்.

கலைஞர் பிறந்த நாள் விழாவிற்கு அழைத்தபோது சென்றுவிட்டேன். என்ன… அவருடைய இரண்டு படங்களில் டயலாக் பேசி நடித்திருக்கிறேன். என்னைப் பொறுத்தவரைக்கும், என்னுடைய வசனகர்த்தா; நடிகர் என்று சென்றுவிட்டேன்.

பிறகு, தி.மு.க. ஆளுங்கட்சி ஆகிவிட்டது. அதற்குப் பிறகு, நமது தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய பிறந்தநாள் விழாவிற்கு வரச் சொல்லி அழைக்கிறார்கள். அப்போது நான் சொன்னேன், “தம்பி, அப்போது நான் வந்தபோது தி.மு.க. எதிர்க்கட்சி. அது அல்லாமல், கலைஞர் வசனத்தில் நான் இரண்டு படம் பேசி நடித்திருக்கிறேன். இப்போது தி.மு.க. ஆளுங்கட்சி. இப்போது ஸ்டாலின் அவர்களுடைய பிறந்தநாள் விழாவிற்கு வந்தால் தவறாக தெரியுமே… நான் வந்தால் என்னை தி.மு.க.காரன் என்று நினைத்துக் கொள்வார்களே” என்றேன். அப்போது சேகர்பாவு, “அப்படித்தானே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.” இனி மேல் அதை மாற்ற முடியாது. உங்களை தி.மு.க.காரன் என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பேசாமல் வந்து பேசுங்கள் என்பது போன்று உரிமையோடு அழைத்தார்கள்.

அப்போது நான் மேடைக்கு வரும்போது, தயங்கி தயங்கி வந்தேன். நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்று. மிகவும் தயக்கத்தோடு வந்தேன். பிறகு, பேசிவிட்டு சென்றுவிட்டேன்.

ஆனால், இந்த நான்கரை வருடம் துணிச்சலான சமூக நீதி ஆட்சியை, பெரியார்-அண்ணா-கலைஞர் வழியில், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய ஆளுமையையும் அர்ப்பணிப்பையும் பார்க்கும்போது, “தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்”, “ஓரணியில் தமிழ்நாடு” என்று கொள்கை முழக்கத்தை கேட்கும்போது, நிறைவேற்றிய திட்டங்களைப் பார்க்கும்போது, தயக்கமில்லாமல்-முழுமனதோடு-மிக்க மகிழ்ச்சியோடு, இந்த முப்பெரும் விழாவில் கலந்து கொள்கிறேன். அன்று தயக்கத்தோடு வந்தவன். இன்றைக்கு துணிச்சலோடு வருகிறேன்; மகிழ்ச்சியோடு வருகிறேன்.

### ஒரு புன்னகையில் வெற்றி கொள்ளும் முதல்வர்!

நான் முதலமைச்சரையே ஒரு டெஸ்ட் செய்து பார்த்தேன். அவர் ஆட்சிக்கு வந்தவுடன், அவருக்கு வாழ்த்துச் சொல்வதற்காக பூச்செண்டையும், தந்தை பெரியார் படத்தையும் எடுத்துச் செல்கிறேன். **எந்தளவிற்கு பெரியாருடைய கொள்கைகளில் ஒரு வீச்சோடு - தைரியத்தோடு-பலத்தோடு முதல்வர் இருக்கிறார் என்பதை பார்ப்பதற்காக. ஒரு எம்பரைசிங்கான விஷயத்திற்கு கொண்டு வந்து விடக்கூடாது என்பதற்காக தனியாக பூச்செண்டை மட்டும் கொடுத்து ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்கிறேன். பிறகு, பெரியார் படத்தை மட்டும் கொடுத்து புகைப்படம் எடுத்துக் கொள்கிறேன். பார்க்கலாம்… நாளைக்கு பத்திரிகையில் இந்த பூச்செண்டு கொடுக்கும் படம் வருகிறதா அல்லது பெரியார் படத்தை கொடுத்த புகைப்படம் வருகிறதா என்று. அடுத்த நாள் பூச்செண்டு கொடுத்த படம் வரவில்லை; பெரியார் படம் கொடுத்த புகைப்படம்தான் வருகிறது. அப்போதே நினைத்தேன், கட்ஸ் என்றால் திராவிட மாடல் முதல்வர் ஸ்டாலின் அவர்கள்தான்.**

அவர் அனைத்து இடங்களிலும் வீர வசனமாககையை தூக்கி பேச வேண்டிய அவசியமே இல்லை. நம்முடைய முதலமைச்சர் ஒரு புன்னகையில் தட்டி விட்டு சென்று விடுவார்.

சட்டசபையில் கவர்னர் வெளிநடப்பு செய்தார் அல்லவா… அப்போது எழுந்து எதாவது வீரமாக கர்ஜித்தாரா… ஒரு சின்ன சிரிப்பு, அவ்வளவுதான்… ‘போ, நீ சென்றால் செல்… இங்கு யாரும் உன்னை இருக்க சொல்லவில்லை… நீ வந்தால் என்ன… சென்றால் என்ன… நான் மக்களுக்காக இங்கு உட்கார்ந்திருக்கிறேன். என் கடமை மக்களுக்கு பணி செய்வதேயொழிய உங்களுக்கு எழுந்து சல்யூட் அடிப்பது இல்லை’ என்பதை நிரூபித்த ஒரு ஒப்பற்ற முதல்வர்தான், நம்முடைய ஸ்டாலின் அவர்கள்.

இன்றைக்கு முப்பெரும் விழா என்று நினைத்தேன். ஆனால் இங்கு, ‘லட்சியத் தலைவர்களின் தத்துவம்-எழுச்சியில் மலர்ந்தது திராவிடம்’ என்று போட்டிருக்கிறது. ஒன்றும் தவறில்லை. அப்போதும் முப்பெரும் விழாவாக இதை எடுத்துக் கொண்டு பேசலாம்.

### ஆதிக்கத்திற்கு எதிராக நிற்பதுதான் பெரியார் கொள்கை!

பெரியார் ஒரு ஒப்பற்ற தலைவர். பிறப்பால்- சாதியால் - பாலின பாகுபாட்டால், யாரும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் இல்லை. அதற்குத் தடையாக இருக்கும் அனைத்தையும் அடித்து நொறுக்குவேன் என்று வந்தவர்தான் பெரியார். அவர் சுருக்கமாக ஒன்றைச் சொன்னார், “நீங்கள் யார்? ஆதிக்கத்திற்கு எதிரானவன். ஒரு பெரிய நாடு, ஒரு சின்ன நாட்டை ஆதிக்கம் செய்தால், அந்த சிறிய நாட்டுக்கு ஆதரவாக நான் இருப்பேன். அந்த சிறிய நாட்டில் இருக்கும் ஒரு பெரிய மதம், சிறிய மதத்தை ஆதிக்கம் செலுத்தினால், நான் சிறிய மதத்திற்கு ஆதரவாக பெரிய மதத்திற்கு எதிராக இருப்பேன். அந்தப் பெரிய மதத்தில் இருக்கும் ஒரு மேல் ஜாதிக்காரன் கீழ் ஜாதிக்காரன்என்று கருதப்படுபவனை ஆதிக்கம் செலுத்தினால், நான் கீழ் ஜாதி என்று கருதப்படுபவனுக்கு ஆதரவாக மேல் ஜாதி என்று கருதப்படுபவனுக்கு எதிராக-ஆதிக்கத்திற்கு எதிராக நிற்பேன். அந்த தாழ்த்தப்பட்ட ஜாதியில் இருக்கும் ஒரு புருஷன், பொண்டாட்டியை அடிமை செய்தால், நான் அந்த பொண்டாட்டி பக்கம் நின்று, அந்த புருஷனை எதிர்ப்பேன். என்னுடைய கொள்கை ஆதிக்கத்திற்கு எதிராக நிற்பதுதான்” என்று பேசியது மட்டுமல்லாமல், பெண் விடுதலைக்காக எத்தனையோ பாடுபட்டார்.

அவர் ஒரு முக்கியமான விஷயம் என்ன சொன்னார் என்றால், “நம்முடைய பெண்களை எல்லாம் சமையல் அறையில் இருந்து வெளியே வர வைத்து விட்டு, அவர்கள் கையில் இருக்கும் கரண்டியை பறித்துவிட்டு, புத்தகத்தை கொடுங்கள்; பேனாவை கொடுத்து வேலைக்கு அனுப்புங்கள்: சம்பாதிக்கச் சொல்லுங்கள்; அப்போதுதான் சரியாக இருக்கும். நீங்கள் எல்லாம் நினைக்கலாம், நாங்கள் எல்லாம் வேலைக்கு சென்று சம்பாதித்தால், புருஷனுக்கு யார் உணவு சமைப்பது என்று. அவன் சாப்பிட்டால் சாப்பிடட்டும்… இல்லாவிடில் சாப்பிடாமல் இருக்கட்டும். நமக்கு என்ன? அவர்கள் எப்படியும் சாப்பிட்டுக் கொள்வார்கள். நம்முடைய வேலை அதுவா? நாம் சென்று சம்பாதிக்க வேண்டும்; பெண்களெல்லாம் ஐ.ஏ.எஸ். படிக்க வேண்டும்; ஐ.பி.எஸ். படிக்க வேண்டும்; வக்கீலுக்கு படிக்க வேண்டும்; டாக்டருக்கு படிக்க வேண்டும்; இன்ஸ்பெக்டர்-ஆக வேண்டும்; விமானம் ஓட்ட வேண்டும்; சந்திர மண்டலத்திற்குச் செல்ல வேண்டும். ராணியாக வாழ வேண்டும். அதை விட்டுவிட்டு, இவனுக்கு சாப்பாடு செய்து கொடுப்பதா உங்கள் வேலை.” இந்த அளவிற்கு பேசியவர் தந்தை பெரியார் அவர்கள்.



### எத்தனை கோடி ரூபாய் கொடுத்தாலும் புராண படத்தில் நடிக்கமாட்டேன்!

லட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். ஏன் அவருக்கு லட்சிய நடிகர் என்று பட்டம் என்றால், அன்றைக்கு அவர் பெரிய ஹீரோ. அன்றைக்கு சம்பளம் என்று பார்த்தால், முதலாவது வாத்தியார் எம்.ஜி.ஆர். அவர்கள், இரண்டாவது நடிகர் திலகம் சிவாஜி அவர்கள், மூன்றாவது காதல் மன்னன் ஜெமினி கணேசன் அவர்கள், நான்காவது லட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். அவர்கள், அவருக்கு ஏன் லட்சிய நடிகர் என்று பெயர் என்றால், எவ்வளவு கோடியை கொட்டிக் கொடுத்தாலும் புராண படங்களில் நடிக்க மாட்டேன் என்று இறுதிவரை லட்சியத்தோடு இருந்தார். அதனால்தான்அவர் பெயர் லட்சிய நடிகர்.

பெரியார் திடலில் ஒரு நிகழ்ச்சியில் நானும் எஸ்.எஸ்.ஆர். அவர்களும் கலந்து கொண்டோம். எனக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி. அதை உங்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

**அண்ணா அவர்கள், ‘சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்’ என்று ஒரு நாடகம் போட்டார். அந்த நாடகத்தில் மராட்டிய சிவாஜி வேடத்தில் நடிக்க இருந்தவர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள். இறுதி நேரத்தில் ஏதோ ஒரு காரணமாக அவரால் வர முடியாது என்று சொல்லிவிட்டார். உடனே அவசர அவசரமாக இரவோடு இரவாக நடிகர் திலகம் சிவாஜியை அழைத்து, அப்போது அவர் பெயர் கணேசன்தான். கணேசா, எம்.ஜி.ஆர்.இறுதி நேரத்தில் ஏதோ ஒரு காரணத்திற்காக தவிர்த்துவிட்டார். என்ன செய்வாயோ தெரியாது… இரவோடு இரவாக வசனங்களை மனப்பாடம் செய்து, நீதான் அதில் கதாபாத்திரத்தில் நடிக்க வேண்டும் என்று சொல்லிவிட்டார். அந்த நாடகத்திற்கு தலைமை தாங்க வந்த தந்தை பெரியார் அவர்கள். சிவாஜி சாரின் நடிப்பை பார்த்துவிட்டு, இன்றிலிருந்து இந்த தம்பி பெயர் கணேசன் கிடையாது; சிவாஜி கணேசன். அவ்வாறுதான் நடிகர் திலகத்திற்கு பெயர் வந்தது. அப்படிப்பட்ட எஸ்.எஸ்.ஆர், அந்த சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யத்தில் காகபட்டர் என்று ஒரு கதாபாத்திரம். எஸ்.எஸ்.ஆர். சொல்கிறார், “எனக்கு என்ன ஆசை என்றால், என்றைக்காவது ஒரு நாள் சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்ஜியம் என்ற நாடகத்தை மறுபடியும் போட வேண்டும், அவ்வாறு போட்டால் என்னுடைய அருமைத் தம்பி சத்யராஜ் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் நடித்த ‘காகப்பட்டர்’ கதாபாத்திரத்தில் நடிக்க வேண்டும்” என்று சொல்கிறார்.** நான் அந்த நாடகத்தை பார்த்ததில்லை. எனக்கு அவ்வளவு சந்தோஷமாக இருந்தது.

அப்போது, திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி இருந்தது என்றால், அண்ணா ஆட்சிக்கு வந்து விடுகிறார்; முதலமைச்சர் ஆகிறார். முதல் முறையாக வெளிநாட்டிற்கு சுற்றுப்பயணம் செல்கிறார். எஸ்.எஸ்.ஆர்-யிடம் கேட்கிறார், “தம்பி ராஜேந்திரா… சினிமாவில் நடிப்பதற்காக உங்களுக்கு பேண்ட், சர்ட், கோர்ட் எல்லாம் தைக்கிறார்கள் அல்லவா… அதையெல்லாம் வீட்டிற்கு எடுத்து வந்துவிடுவீர்களா அல்லது மீண்டும் தயாரிப்பாளரிடமே கொடுத்து விட வேண்டுமா?”. “அண்ணா, அது அனைத்தும் தயாரிப்பாளருக்கு பணம் கொடுத்து வாங்கியிருக்கிறார். அதையெல்லாம் மீண்டும்அவரிடமே கொடுக்க வேண்டும். ஏன் கேட்கிறீர்கள் அண்ணா?”. “நான் வெளிநாடு செல்கிறேன். என்னிடம் பேண்ட், சட்டையே கிடையாது. ஏதோ உன் அளவிற்கு நான் வடிவமைப்பு செய்து போட்டுச் செல்கிறேன்” என்று ஒரு முதலமைச்சர் கேட்கிறார். “இது ஒரு பெரிய பிரச்சனையா… நான் உங்களுக்கு தைத்துக் கொடுத்து அனுப்புகிறேன்” என்றார். எவ்வளவு எளிமையான மனிதர் பாருங்கள்.

பெரியாருக்கும்-அண்ணாவிற்கும் கருத்து முரண்பாடு வந்து, அண்ணா வெளியே வந்தது மிகவும் நன்றாகிவிட்டது. அன்றைக்கு இரண்டு பிரதான கட்சிகள்: காங்கிரசும் - கம்யூனிஸ்ட்உம் தான். நீதி கட்சி ஆட்சிக்குப் பிறகு, தேசிய கட்சிகள்தான் முக்கியமான இடத்தை வகித்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்த பிறகுதான், முதல்முறையாக இந்தியத் துணைக்கண்டத்தில் ஒரு மாநிலக் கட்சி ஆட்சிக்கு வந்தது தி.மு.க.தான். இப்படிப்பட்ட மிகப்பெரிய சரித்திர சாதனை தி.மு.க.விற்கு இருக்கிறது.

**அவ்வளவு வேண்டாம்… இன்றைக்கும் இந்திய பிரதமர் மோடி அவர்கள் கலைஞருக்கு நன்றி சொல்ல வேண்டும். எதற்கு தெரியுமா? சுதந்திர தினத்தன்று, குடியரசுத் தினத்தன்றும், தேசியக் கொடியை கவர்னர்தான் ஏற்றிக் கொண்டிருந்தார். கலைஞர் வந்த பிறகுதான், போராடி, சுதந்திரத் தினத்தன்று முதலமைச்சர்தான் தேசியக்கொடி ஏற்ற வேண்டும் என்று சொல்லி, கலைஞர் அன்றைக்கு அந்த உரிமையை வாங்கி கொடுத்த பிறகுதான், முதலமைச்சராக இருந்த மோடி அவர்கள் குஜராத்தில் தேசியக்கொடி ஏற்ற முடிந்தது. அவர் தேசியக்கொடி ஏற்றிவிட்டு, தேசியக்கொடிக்கு சல்யூட் அடிக்கும்போது, கலைஞரை நினைத்து பார்க்க வேண்டும். அந்த சல்யூட்டுக்கு சொந்தமானவர், கலைஞர் அவர்கள்தான்.**

அவ்வாறு 1967-இல் இந்த ஆட்சி மலர்ந்ததற்குப் பிறகு, கலைஞர் கொண்டு வந்த திட்டங்கள் இருக்கிறதே… அண்ணா ஒரு வருடத்திற்குள் மறைந்து விட்டார். அதற்குப் பிறகு, 9 ஆண்டு காலம் கலைஞர் விதைத்த விதையில் வளர்ந்த செடிகளும் மரங்களும்தான், இன்றைய தமிழ்நாடு. அதற்குப் பிறகு, ஆட்சி மாறி மாறி வந்திருக்கிறது. இரண்டு ஆட்சியிலும் திராவிடம் என்ற பெயர்தான் இருந்திருக்கிறது. ஆனால், கலைஞர் விதைத்த விதை எல்லாம் கலைஞர் போட்ட திட்டத்திலிருந்து வெளியே வரவே முடியவில்லை. ஏனென்றால், அவ்வளவு மக்களுக்கு பயனுள்ள திட்டங்களை அவர் போட்டிருக்கிறார். எனவே அதிலிருந்து வெளியே வந்தால், பெயர் கெட்டுவிடும். கலைஞர் போட்ட திட்டத்தை பெரிதுபடுத்ததான் முடியுமே தவிர, வெளியில் வந்துவிட முடியாது. அப்படிப்பட்ட திட்டங்களை அமைத்தவர் நம்முடைய கலைஞர் அவர்கள்.

இன்றைக்கு கூட பாருங்கள்… நான் ஒரு கட்சி ஆரம்பிக்கவில்லை; ஒரே ஆள் பேசினால் போதாது; பின்னால் வலுவான கூட்டம் இருக்க வேண்டும் என்று சொன்னபோது, அனைவரும் பெரிதாக கைத்தட்டினீர்கள். இன்றைக்கு மட்டும் என்ன, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் மட்டும் இருக்கிறாரா… அவருக்கு பின்னால் எப்படி ஒரு கூட்டம் இருக்கிறது. தம்பி சேகர்பாபு உள்ளிட்டு ஒவ்வொரு அமைச்சரும் எப்படிப்பட்ட அமைச்சர்கள். ஒவ்வொரு எம்.பி.வும் எப்படிப்பட்ட எம்.பி.க்கள். நாடாளுமன்றத்திற்குச் சென்றால், நாடாளுமன்றமே நடுங்குகிறது. கனிமொழி அவர்களுடைய பேச்சிலும், திருச்சி சிவாவின் பேச்சிலும், தயாநிதி மாறன் அவர்களுடைய பேச்சிலும், ஆ. ராசா அவர்களின் பேச்சிலும் அலறுகிறதே…

நாம் சொல்லுவோம் அல்லவா… நல்ல கராத்தே ட்ரெயினிங், குங்ஃபூ ட்ரைனிங் எடுக்க வேண்டும் என்றால், ஜப்பானிற்கு செல்ல வேண்டும் என்று. நல்ல சமூக நீதிக்கான ட்ரெயினிங் எடுக்க வேண்டும் என்றால் இந்தியாவில் இருக்கும் ஒட்டுமொத்த அரசியல்வாதிகளும் தமிழ்நாட்டிற்கு வரவேண்டும். அதுதான் இன்றைய தமிழ்நாடு.

என்ன ஒரு அறிவு வளர்ச்சி இருந்தால்… நான் நினைக்கிறேன்… ஸ்பெயினிலோ அல்லதுவேறு எங்கோ கனிமொழி அவர்களிடம், “இந்தியாவினுடைய தேசிய மொழி எது”என்று கேட்டிருக்கிறார்கள். “University in Diversity”, “வேற்றுமையில் ஒற்றுமைதான்” என்றிருக்கிறார். நம்முடைய ஊர் ரஜினி சார் போன்று, ஆங்கிலத்தில் டாம் குரூஸ் என்று ஒருவர் இருக்கிறார். அவருக்கு தமிழ் தெரியுமா; தெரியாது அல்லவா… அது போன்று எனக்கு ஆங்கிலம் தெரியாது. இது ஒரு பெரிய பிரச்சினையே இல்லை. அவருக்கு அவர் தாய் மொழி தெரியும்; எனக்கு என்னுடைய தாய் மொழி தெரியும். ஷாருக்கானுக்கு தமிழ் தெரியுமா; அதுபோன்று எனக்கு ஹிந்தி தெரியாது. யாராவது அருகில் இருந்து சொன்னார்கள் என்றால், ஹிந்தி படம் தெலுங்கு படம், ரஷ்யா படம், உக்ரைன் படம், எந்தப் படம் வேண்டுமானாலும் நடித்து விடுவேன் என்று சொல்லிக் கொண்டே செல்லலாம்.

### தமிழ்நாட்டில் சமூக நீதிப் பார்வை!

“மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி” என்பது கலைஞருடைய முக்கியமான முழக்கமாக இருந்தது. இந்த முழக்கம் மட்டும் வெற்றி அடைந்திருந்தால், நான் சொன்னேன்அல்லவா, அனைவரும் ட்ரைனிங் எடுப்பதற்கு இந்தியாவில் இருக்கும் அனைவரும் இங்கே வரவேண்டும் என்று. மாநில சுயாட்சி அமைந்திருந்தால், உலகத்தில் இருக்கும் அனைவரும் இங்கு வந்திருக்க வேண்டும். ஏன் என்றால், அந்த அளவிற்கு சமூக நீதிப் பார்வை இங்குதான் இருக்கிறது.

நானும் தத்துவ அறிஞர்களுடைய புத்தகங்கள் நிறைய படிப்பேன். ஐயா சண்முக வடிவேல், பா. விஜய் அவர்களுக்கெல்லாம் தெரியும். ஓஷோ, ஜெய கிருஷ்ணமூர்த்தி, யு.ஜி. கிருஷ்ணமூர்த்தி எல்லாம் இருக்கிறார்கள். ஒரு ஆள் சொல்கிற சமூகநீதி, சமூக புரட்சியிலும் சரி; ஆன்மீகப் புரட்சியிலும் சரி, தந்தை பெரியாரை அடித்துக் கொள்ள ஆளே இல்லை. அங்கு ட்ரைனிங் ஆகி வந்தவர்கள்தான், இங்கு இவ்வளவு சிறப்பாக இருக்கிறார்கள். முக்கியமாக இட ஒதுக்கீடு, பி.சி., எம்.பி.சி., ஓ.பி.சி., எஸ்.சி., இவர்களுக்கு எல்லாம் கல்வியை கொடுத்து-வேலை வாய்ப்பு கொடுத்து, ஹிந்தி எதிர்ப்பை நிலைநாட்டி, அனைவரும் வந்து நிற்கிறார்கள் என்றால், அதற்கு காரணம் கலைஞர் அவர்கள்தான். கலைஞர் முதலமைச்சராக இருக்கும் போது போட்ட விதைகள்தான்.

சமூக வலைதளங்கள் வந்ததற்கு பிறகுதான், எனக்கே கலைஞருடைய சாதனைகள் நிறைய தெரிந்தது. எந்தளவிற்கு கலைஞர் சாதனைகள் செய்திருக்கிறார் என்று. அவர் கையால், நான் பெரியார் விருதை வாங்கிவிட்டேன்; எம்.ஜி.ஆர். விருதை வாங்கிவிட்டேன்; நான் வில்லனாக நடித்த முதல் படம் ‘சட்டம் என் கையில்’, அதற்கு1978-இல் விருது வாங்கிவிட்டேன். நான் கதாநாயகன் நடித்தபோது நடந்த முதல் நிகழ்ச்சி ‘பாலைவன ரோஜாக்கள்’ படத்தின் 100 வது நாள் விழாதான், அதிலும்கதாநாயகனாக நடித்ததற்கும் கலைஞரிடம்தான் விருது வாங்கினேன். கலை ஞரிடம் இவ்வளவு விருது வாங்கி விட்டேன்.

ஆனால், முக்கியமான விருது எனக்கு கிடைக்கவே இல்லை. அது என்ன விருது என்றால், கலைஞர் விருது. அதை முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்தான் எனக்கு கொடுத்து பெருமைப்படுத்தினார்கள். அவருக்கு இந்த நேரத்தில் மிகப்பெரிய நன்றியை நான் சொல்ல விரும்புகிறேன்.

### ஆபத்தானவர்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்கள், திராவிடர் கழகமும் - திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கி போன்று செயல்படும் என்று சொன்னார்.

நம்முடைய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய பெருமையை நான் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. ஒரு ஆள் சொல்லிவிட்டார், யார்? எச். ராஜா. என்ன சொன்னார்? கலைஞரை விட ஆபத்தானவர் ஸ்டாலின். ஏய், எங்களுக்கு அதுதான் வேண்டும். ஐயா… ராஜா… எங்களுக்கு அதுதான் ராஜா வேண்டும். கலைஞரைவிட ஆபத்தானவர் ஸ்டாலின் என்று சொல்லி விட்டீர்கள், அது போதும் எங்களுக்கு.

இப்போது என்ன ஆனது என்றால், சனாதனத்தை ஒழிப்பேன் என்று உதயநிதி ஸ்டாலின் சொல்லிவிட்டார். இந்தியா முழுவதும் பிரச்சினை. “சொன்னது சொன்னதுதான், அதை திருப்பி வாங்க முடியாது” என்று சொல்லிவிட்டார்.

இப்போது என்ன பிரச்சினை ஆகிவிட்டது, கலைஞரைவிட ஆபத்தானவர் ஸ்டாலின்; ஸ்டாலினைவிட ஆபத்தானவர் உதயநிதி ஸ்டாலின். எங்களுக்கு வேறு எந்த பட்டமும் வேண்டாம். உங்கள் வாயிலிருந்து இவர்கள் ஆபத்தானவர்கள் என்று சொல்வதே எங்களுக்கு போதும்.

### தலைமைத் தொண்டன் நான்!

இன்றைக்கு வடநாட்டில் இருந்து வந்த ஒவ்வொரு தொழிலாளியிடமும், மீண்டும் உங்கள் மாநிலத்திற்கு செல்கிறீர்களா? என்று கேட்டால், ஓங்கி அறைந்து விடுவார்கள். நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். ஏன் கொடுமைப்படுத்துகிறீர்கள். ஏன் செல்ல மாட்டேன் என்கிறார்கள்? அவ்வளவு கொடுமைகள்; அவ்வளவு சாதிய கொடுமைகள்; அவ்வளவு பெண்ணடிமைத்தனமான கொடுமை; இங்கு வந்தால் அவ்வளவு சந்தோசமாக இருக்கிறார்கள்.

ஒரு வார்த்தை வருகிறது பாருங்கள். நேற்று, கரூர் மீட்டிங் பார்த்தேன். கொட்டும் மழையில் லட்சக்கணக்கான மக்களுக்கு முன்னால் பேசுகிறார். எனக்கு அந்த வார்த்தை மிகவும் பிடித்திருந்தது. தம்பி சேகர்பாபு அவர்கள், முதல்வரிடம் மறக்காமல் சொல்லுங்கள். அவர் பேசும் போது, தன்னை முதல்வர் - தி.மு.க. தலைவர் என்று சொல்லிக் கொள்வதை விட, தலைமைத் தொண்டன் என்று சொன்னார். அந்த வார்த்தைதான் முக்கியமான விஷயம். ஏன் தலைமைத் தொண்டன் என்று சொல்கிறோம் என்றால், அவ்வளவு கடுமையான உழைப்பு.

வெளிநாடு பயணங்கள் எல்லாம் முடித்துவிட்டு வந்தவுடன், இங்கு வந்து வேலை செய்ய ஆரம்பித்து விடுகிறார். எனக்கு எல்லாம் வெளிநாடு சென்று வந்தால், அந்த ஜெட் லாக் செல்வதற்கே ஒரு மணி நேரம் ஆகும். வெளிநாடு சென்று வந்தவர்களுக்குதான் தெரியும். தூக்கம் மாறி விடுகிறது அல்லவா… அது மிகவும் கொடுமையான விஷயம். அதை எல்லாம் பற்றி கவலைப்படாமல் பிரமாதமாக செய்து, ஒரு ஓய்வறியாச் சூரியனாக வாழ்ந்து கொண்டிருப்பவர் நமது முதல்வர் அவர்கள்.

### ஒரே செங்கல்லை வைத்து 200 அடிக்கப் போகிறோம்!

முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்தில் ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டியில் தந்தை பெரியாரின் படத்தை திறந்து வைத்ததற்கு நான் மாபெரும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஆக்ஸ்போர்டில் எவ்வளவு பெரிய அறிஞர்கள் இருப்பார்கள். அவர்கள் எல்லாம் பெரியாரை ஏற்றுக்கொண்டு, அவர் படத்தை திறக்கிறார்கள். நீங்கள் இங்கு கத்திக் கொண்டிருக்கிறீர்களே… உங்கள் பேச்செல்லாம் எடுபடுமா?

இவர்கள் எல்லாம் தாண்டி ஒருவர் இருக்கிறார். பெரியார் நான்கடி எடுத்து வைத்தால், அண்ணா 10 அடி; அண்ணா 10 அடி எடுத்து வைத்தால், கலைஞர் 20 அடி; கலைஞர் 20 அடி எடுத்து வைத்தால், ஸ்டாலின் அவர்கள் 30 அடி; ஸ்டாலின் 30 அடி எடுத்து வைத்தால், உதயநிதி ஸ்டாலின் 100 அடி எடுத்து வைக்கிறார். ஒரே செங்கல். ரஜினி சார் படம் டயலாக்தான் ஞாபகம் வருகிறது. நான் ஒரு செங்கல் எடுத்தால், 100 செங்கல் எடுத்தது மாதிரி என்பது போன்று, ஒரே செங்கலில், 100 செங்கல் கிடையாது. வரப்போகும் தேர்தலில் 200. 2026இல் ஒரு செங்கல்லை வைத்துக்கொண்டு 200 அடிக்கப் போகிறோம்.

2026 மட்டுமல்ல, ஏன் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி தொடர வேண்டும் என்றால், நான் தனிப்பட்ட முறையில் சொல்கிறேன். எனக்கு எந்த பிரச்சனையும் கிடையாது. நான் ஒரு பணக்காரன். இந்தியாவின் சராசரி குடிமகனைப் பார்த்தால், நான் பணக்காரன். நான் நடிகன். நான் நடிக்கும் நடிப்பை வைத்துதான் எனக்கு மார்க்கெட் இருக்கிறது. எனக்கு யார் ஆட்சிக்கு வந்தாலும் தனிப்பட்ட முறையில் கவலை இல்லை. ஆனால், இந்த தமிழ்நாடு நன்றாக இருக்க வேண்டும் என்றால், சமூக நீதிக் கொள்கையை மனதில் ஏற்றிக்கொண்ட திராவிட முன்னேற்றக் கழக அரசு தம்பி சேகர்பாபு அவர்களை போன்று மாபெரும் போர்படைத் தளபதிகளை கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தால்தான் தமிழ்நாட்டுக்கு நல்லது என்று கூறி உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு நடிகர் சத்யராஜ் உரையாற்றினார்.